Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 399 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது மாசி 14 ஆம் நாள் ஷவ்வால் 11 (26-2-64) புதன்கிழமை இதழ் 16

உரம்

சகலவிதமான பயிர்களுக்கும் வேண்டிய பசளை பெற்றுக்கொள்ளலாம்

ஆ. மா. கிருஷ்ணபிள்ளை அளவெட்டி.

# வைத்திய நிபுணர்கள் இன்று வேலைநிறுத்தம்?

## அரசாங்க டாக்டர்களும் சேரலாம்

### "நிலைமையை சமாளிக்க அரசாங்கம் தயார்"

கொள்ளுப்பிட்டி, செவ்வாய்

**இலங்கையிலுள்ள 160 வைத்திய நிபுணர்கள் நாளை புதன்கிழமை முதல் வேலை நிறுத்தம் செய்வதென்று தீர்மானித்துள்ளனர். நாட்டிலுள்ள எந்த ஆஸ்பத்திரிக்கும் அவர்கள் செல்லமாட்டார்கள். ஆனால் 'மிக அவசர சேவைகளுக்கு' உதவுவதென்றும் அவர்கள் முடிவுசெய்துள்ளனர். வைத்திய நிபுணர்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ள அரசாங்க வைத்திய டாக்டர்களும் இன்னும் இரண்டொரு தினங்களில் வேலைநிறுத்தம் செய்யக்கூடுமென்றும் அறியப்படுகிறது.**

வேலைநிறுத்தம் செய்வதென்று தீர்மானித்துள்ள வைத்திய நிபுணர்களும் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ள அரசாங்க டாக்டர்களும் கூட்டாக ஒரு மகஜரை பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு சமர்ப்பித்துள்ளனர். இந்த மகஜரில் வைத்திய நிபுணர் சங்க சார்பில் டாக்டர் பி. ஆர். அந்தோனியும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் டாக்டர் ஏ. டி. எஸ். போலும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த மகஜரில் தங்கள் கோரிக்கைகள் பற்றியும் அரசாங்கத்துடன் தாங்கள் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தம் செய்வதென்று தீர்மானித்துள்ள வைத்திய நிபுணர்கள் அவசரகால சேவை புரிய தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர் ஆனால் பொதுமக்கள் தங்களுக்குத் தொந்தரவு கொடுத்தாலோ அரசாங்கம் வெளியார்களை சேவைக்கு எடுத்தாலோ அவசரகால சேவையையும் நிறுத்திவிடுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

**டாக்டர்கள் வேலைநிறுத்தம்**

வைத்திய நிபுணர்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ள அரசாங்க டாக்டர்கள் நாளை இம்மாதச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டதும் வேலைநிறுத்தம் செய்யக்கூடுமென அறியப்படுகிறது.

**'அரசாங்கம் அஞ்சாது'**

இன்று காலை நடைபெற்ற அரசாங்கக்கட்சிக் கூட்டத்தில் வைத்திய நிபுணர்களின் வேலைநிறுத்த யோசனை பற்றி விவாதிக்கப்பட்டது. "ஒரு சில வைத்திய நிபுணர்களின் மிரட்டலுக்கு அரசாங்கம் அஞ்சமாட்டாது. எந்த நிலைமையையும் எதிர்த்தும் சமாளிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது' என்று உதவி சுகாதார மந்திரி திரு. ஜே. பி. ஒபயசேசரா தெரிவித்ததாக அறியப்படுகிறது.

இரத்மலானையில்

## திடீரென இறங்கிய இந்திய படை விமானங்கள்

### இராணுவம் காவல்போடப்பட்டது

கொள்ளுப்பிட்டி, செவ் நவசீனப் பிரதமர் சூ-என்-லாய் இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கவிருக்கும் இச்சமயத்தில் இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானம் ஒன்று எவ்வித முன்னறிவிப்புமின்றித் திடீரென்று விமான நிலையத்தில் வந்திறங்கிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

இச்சம்பவம் திங்கட்கிழமை இரவு நிகழ்ந்தது. இந்திய விமானப்படை விமானம் ஒன்று எவ்வித தகவலுமில்லாமல் திடீரென இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கியதும் விமான நிலைய அதிகாரிகள் உடனடியாக அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். இதைத் தொடர்ந்து இலங்கை இராணுவ அணியொன்று இரத்மலானை விமான நிலையத்துக்கு விரைந்து சென்று இந்திய விமானப்படை விமானத்தைச் சூழ்ந்துகொண்டது. அந்த விமானத்திலிருந்து எவரும் கீழிறங்க அனுமதியளிக்கப்படவில்லை.

**மற்றொரு இந்திய விமானம்**

இதன் பின் இந்திய விமானப் படையைச் சேர்ந்த மற்றொரு விமானமொன்று இரத்மலானை விமான நிலையத்தில் இறங்குவதற்கு அனுமதி கோரியது. சிலமணி நேரம் வரை வானவெளியில் பறந்து கொண்டிருந்த அந்த இரண்டாவது விமானத்துக்கு விமான நிலைய அதிகாரிகள் பின்னர் அனுமதிகொடுத்தனர். அந்த விமானம் இறங்கிய பின்னர் அதனுள் இருந்தவர்களும்கூட விமான நிலையத்திலிருந்து வெளியே இறங்க அனுமதியளிக்கப்படவில்லை.

இந்த இரண்டு விமானங்களையும் சுற்றிக் காவல்புரிய அவசியமேற்பட்டால் அந்த விமானங்களில் உள்ளவர்களைக்

(6-ம் பக்கம் பார்க்க)

## சாரதியை அகற்றிவிட்டு டாக்ஸியை எடுத்துச்சென்றனர்

### இருவருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், செவ் யாழ்ப்பாணத்திலிருந்து நெல்லியடிக்கு டாக்ஸி மூலம் சென்ற மூவர் நாகர்கோவிலுக்குச் செல்லும் வழியில் சாரதியை அடித்து டாக்ஸியின் பின் சீட்டில் கிடத்திவிட்டுத் தாங்களே டாக்ஸியைச் செலுத்தியபோது சாரதி தந்திரமாக டாக்ஸியிலிருந்து குதித்துத் தப்பிய சம்பவம் இங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுசம்பந்தமாகப் பொலிசார் இருவரைச் சந்தேகத்தின் மீது கைதுசெய்து ரிமாண்டில் வைத்திருப்பதோடு தொடர்ந்து புலன்விசாரணை செய்து வருகிறார்கள்.

யாழ்ப்பாணம் சுபாஸ் கபேக்குச் சொந்தமான டாக்ஸியில் 19-ந் தேதி காலை 11 மணிக்கு மூவர் நெல்லியடிக்கு போகப் போவதாக ஏறிக்கொண்டார்கள் என்றும், சாரதி லோகநாதன் அவர்கள் சொன்ன பாதையின்படியே நாகர் கோவிலுக்குச் செல்லும்போது தான் மேற்படி சம்பவம் நிகழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

டாக்ஸியிலிருந்து தந்திரமாகத் தப்பிய சாரதி ஒரு மைல் தூரம் ஓடி, அங்கு நின்ற வேறொரு கார் மூலம் பருத்தித்துறை பொலிஸ்நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்தாரென்றும் அறியப்படுகிறது.

டாக்ஸியைக் களவாடிச் சென்றவர்கள், செல்லும் வழியில் ரோட்டு பழுதுபார்த்துக் கொண்டிருந்த ஓவர்சியரையும், தொழிலாளர்களையும் கண்டு பயந்து டாக்ஸியை விட்டுவிட்டு இறங்கி ஓட்டம்பிடித்தார்களென்றும், அங்குள்ள ஒரு வீட்டில் தங்கிவிட்டு மறைந்துவிட்டார்கள் என்றும் தெரியவருகிறது.

'எல்லைப் பிரச்னையில்

## சமாதானத் தீர்வுக்கு சூவை இணங்க வைக்கமுடியும்'

### சிறிமாவோ நம்பிக்கை

கொழும்பு, செவ்வாய் இந்திய-சீன எல்லைப் பிரச்சினையில் சமாதானன தீர்வுக்குவர, சீனப் பிரதமர் சூ-என்-லாயை இணங்கச் செய்ய முடியுமெனத் தாம் நம்புவதாகப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா இன்று செனட்டில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர். தாம் நடத்தவிருக்கும் பேச்சுக்களில் சீன-இந்திய எல்லைப் பிரச்சினை பிரதான இடம்பெறுமென நம்புவதாயும் அவர் கூறினர்.

சனிக்கிழமை இலங்கை-சீன பிரதமர்களுக்குமிடையே இறுதிப் பேச்சுகள் முடிவடைந்த பின் கூட்டறிக்கை ஒன்று வெளியாகுமென அறிவிக்கப்படுகிறது. அன்றைய தினம் நள்ளிரவுக்குப் பின் சீனப் பிரதமர் கோஷ்டி இலங்கையை விட்டுப் புறப்படும்.

கொழும்பு நகரில் இன்று காணப்பட்ட பல சுவரொட்டிகளில் சீனப் பிரதமர் தாயகம் திரும்பும்போது, சண்முகதாசனையும் உடன் அழைத்துச் செல்லுமாறு கேட்கப்பட்டிருந்தது.

## 107 கோடி ரூபாய்

### பாரதத்துக்கு அமெரிக்கா உதவி

புதுடில்லி, பெப். 25 பாரதத்துக்கு அமெரிக்கா 22 கோடியே 50 லட்சம் டாலர் (107 கோடி ரூபாய்) கடனுதவி அளித்துள்ளது. இது சம்பந்தமான உடன்படிக்கை நேற்று புதுடில்லியில் கையெழுத்தானது.

## அசைஸ் விசாரணை

யாழ்ப்பாணம், புதன் வடபகுதி அசைஸ் நீதிமன்ற விசாரணை அடுத்தமாதம் 16-ந் திகதி நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. ஸி. முன்னிலையில் ஆரம்பமாகும்.

## விமான விபத்தில் 56 பேர் பலி

நியூஓர்லீன்ஸ், பெப். 25 மெக்ஸிகோவிலிருந்து நியூயோர்க்குக்குச் சென்று கொண்டிருந்த 'ஜெட்விமானம் ஒன்று இங்கு விபத்துக்குள்ளானதாய் அறிவிக்கப்பட்டது. இதில் சென்ற 56 பேரில் எவரும் உயிர்தப்பி இருக்கமுடியாது என அஞ்சப்படுகிறது.

## ஸான்ஸிபார் அங்கீகரிக்கப்படும்

கொழும்பு, செவ்வாய் ஸான்ஸிபாரின் புதிய அரசாங்கத்தை இலங்கை விரைவில் அங்கீகரிக்கும் என பிரதமர் அறிவித்துள்ளார்.

## மணிவாக்கு

நீங்கள் பிரார்த்தனை செய்வதற்கு, தனியிடம் சென்று கதவை மூடிவிட்டு, அந்தரங்கமாகக் கடவுளைப் பிரார்த்தியுங்கள்.

— மாத்தியூ

ஈழநாடு
EELA NADU
EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
மாசி 14 ம் உ. (26-2-64)

## வைத்திய நிபுணர்கள்

நீண்ட காலமாகத் தாங்கள் பொறுத்துவந்துள்ள அநீதிகளையும் அவமானங்களையும் தீர்த்துக் கொள்ள வேலைநிறுத்தம் செய்வதுதான் தங்களுக்கு ஒரே வழி என்று அரசாங்க ஆஸ்பத்திரி வைத்திய நிபுணர்கள் சங்கம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை தெரிவிக்கின்றது.

அவர்களுக்கு என்ன அநீதிகளும் அவமானங்களும் செய்யப்படுகின்றன என்பதை அந்த அறிக்கை விளக்கவில்லை. ஆனால் மற்றும் பல துறைகளிலுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு சாதாரணமாக அளிக்கப்படும் வசதிகள் தங்களுக்கு அளிக்கப்படவில்லையாம். பொதுமக்களின் நோக்கங்களைத் தீர்ப்பதில் தாங்கள் மிக மேலான பணியாற்றி வருவதாயும், என்றாலும் சுகாதார அமைச்சர் இப்போது காட்டும் மனப்பான்மையில் வேலைநிறுத்தம் செய்வதென்ற ஒரே வழிதான் தங்களுக்கு இருப்பதாயும் அந்த நடவடிக்கை எடுக்கத் தங்களுக்குத் தடை எதுவும் இப்போது இருப்பதாகத் தாங்கள் உணரவில்லை என்றும் பயமுறுத்துகிறார்கள்.

இதற்கு முதற்படியாக தனிப்பட்ட 'நர்ஸிங்ஹோம்'களில் அவர்கள் விசேஷ கட்டணங்கள் பெற்றுச் செய்துவந்த வேலையை விட்டுவிட்டனராம்.

இந்த நடவடிக்கை பொதுமக்களுக்கு எவ்வித பாதகமும் செய்வதாகத் தெரியவில்லை. 'நர்ஸிங்ஹோம்' வருமானம் குறைந்திருக்கலாம். இந்த நிபுணர்களுக்கு அதிகப்படி வருவாய் இல்லாமற் போயிருக்கலாம். ஆனால் அந்த 'ஹோம்'களில் பணம் செலுத்தி சிகிச்சை பெற வேண்டியிருந்தவர்களும் அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு வந்து மற்றவர்களைப் போல் சிகிச்சை பெற்றார்கள். ஆஸ்பத்திரிகளில் வழக்கம்போல் வேலை நடந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலுள்ள வைத்திய நிபுணர்களில் பலர் மிகத் திறமைசாலிகளென்பதையும், மக்களுக்கு நல்ல பணிசெய்து வருகிறார்கள் என்பதையும், நாம் மறக்கவில்லை. அந்த அறிக்கை கூறுவதுபோல் ஒரு சில கூடாதவர்கள் இருக்கக் கூடும். அதற்காக இந்த நிபுணர்களனைவரையும் கண்டிப்பது நேர்மையாகாது.

ஆனால் பொதுமக்களுக்கு மேலான சேவை புரிந்துவரும் இந்த நிபுணர்கள் ஒருவிஷயத்தை மறக்கப்படாது. பொதுமக்களுக்கு முழுநேரமும் ஆஸ்பத்திரிகளில் மனிதாபிமானத்துடன் சேவை செய்வதாக விசேஷ பிரமாணமெடுத்து வேலைக்கு அமர்ந்தவர்கள். ஆனால் தனிப்பட்ட நர்ஸிங்ஹோம்களில் அவர்கள் அதிக வருமானத்துக்காக வேலைக்குச் செல்வதால் ஆஸ்பத்திரியிலுள்ள எளிய நோயாளர் பலவிதங்களிலும் பாதிக்கப்படுகின்றார்கள். முழுக்கவனமும் அவர்கள் ஆஸ்பத்திரி சேவையில் செலுத்த முடியாது போகின்றது. இவ்விஷயமாக பொதுமக்களுக்குப் பெரிய குறை இருந்தது. இப்போது அவர்கள் நர்ஸிங் ஹோம் வேலையைவிட்டுவிட்டதால் அந்தக் குறைக்கு இனி இடமில்லை.

வேறு ஏதோ "அநீதிகளும் அவமானங்களும்" இருப்பதாயும் மற்றச் சிப்பந்திகளுக்குள்ள வசதிகள் தங்களுக்கு அளிக்கப்படவில்லை என்றும் அரசாங்கம் கூறுகின்றது. உலகிலே குறையில்லாதவர்களில்லை. அவர்களுக்கிருக்கும் விசேஷ குறைபாடுகளை பொதுமக்களுக்குப் பாதகம் ஏற்படாத முறையில் தீர்த்துக் கொள்ள முற்படுவதே மிக உயர்ந்த சேவையில் ஈடுபட்டுள்ள அவர்களுக்கு அழகு. சுகாதார அமைச்சர் ஆத்திரமூட்டக்கூடியவகையில் கூறுவதை சரியென்று நாம் கூறவில்லை. மந்திரிகள் வருவார்கள் போவார்கள். ஆனால் வைத்திய நிபுணர்கள் நீடித்திருந்து மக்களின் தேக உபாதிகளைத் தீர்க்க வேண்டியவர்கள். ஆகவே மந்திரிமீது கோபித்துக் கொண்டு தங்கள் மேலான கடமையிலிருந்து வழுவி, பொதுமக்களின் அபிமானத்தை இழக்கும் முறையில் நிபுணர்கள் எதுவும் செய்துவிடக்கூடாதென்பதை சுட்டிக்காட்ட வேண்டியது நம்முடைய கடமையாகும்.

## மார்ச் 7-ல் மகாநாயகா பதவியேற்பு

கண்டி, செவ்வாய்

மல்வத்தை புதிய மகாநாயகாவின் பதவியேற்பு வைபவம் சபாமண்டபத்தில் நடைபெறக்கூடாதெனவும் ஸ்ரீ தலதாமாளிகையிலுள்ள பதிருப மண்டபத்தில் இடம்பெற வேண்டுமெனவும் கண்டியிலுள்ள சில பகுதி மக்கள் கருத்துக் கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

மகாநாயகாவின் பதவியேற்பு வைபவம் அடுத்த மாதம் 7-ந் திகதி பிற்பகல் 2-30க்கு நடைபெறும். கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா மகாநாயகாவுக்கு நியமன உறுதிப் பத்திரத்தை அளிப்பார்.

## மாணவருக்கு இராணுவப் பயிற்சி

பருத்தித்துறை, செவ்வாய்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 25 மாணவர்கள் அடங்கிய கோஷ்டியொன்று இராணுவப் பயிற்சி பெற இவ்வாரம் தியத்தலாவை செல்லவிருக்கிறது.

3-ந் திகதி ஆரம்பமாகும் இப்பயிற்சியில் பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களைக் கொண்ட கோஷ்டியினரும் கலந்துகொள்வார்கள் எனத் தெரியவருகிறது.

# பத்திரிகை தலையங்கங்களினால் மக்களின் மனோநிலை பாதிக்கப்படுகிறது

## பத்திரிகை கமிஷன்முன் ஆயுர்வேத வைத்தியர் சாட்சியம்

கொழும்பு, செவ்.

"நாட்டில் குற்றங்களும் கொலைகளும் பெருகுவதற்கு பத்திரிகைகளும் காரணமாகவிருக்கின்றன. தினசரிப்பத்திரிகைகளில் வெளியாகும் சில செய்திகளைப் படிப்பதனால் வாசகர்களின் மனோநிலை பாதிக்கப்பட்டு அதே குற்றத்தைச் செய்ய அவர் தூண்டப்படுகிறார். சில பத்திரிகைகள் கேவலமான முறையில் சில தலையங்கங்களைப் பிரசுரிப்பதால், பெற்றோர் தங்களது குழந்தைகளை பத்திரிகை படிப்பதைத் தடை செய்கிறார்கள்."

பத்திரிகை கமிஷன் முன் ஆயுர்வேத வைத்தியர் திருமதி டி. யு. டி' சில்வா நேற்று சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

"தனது கணவர்கள் இருவருக்கும் அவள் நஞ்சு கொடுத்தாள்"; "அண்ணனும் தங்கையும் தற்கொலை"; "கிணற்றுள் விழுந்து தாய் மரணம்"; "நஞ்சருந்தி இளைஞன் உயிர் மாய்த்தான்"; "கணவருடன் சண்டையிட்ட மனைவி நஞ்சருந்தி தற்கொலை" இப்படியான தலையங்கங்களுடன் செய்திகளைப் பிரசுரிப்பதால் இவற்றைப் படிக்கும் இளைஞர்கள் இப்படியான செயலில் இறங்கக் கூடியதாகவிருக்கிறது."

இதற்கு முன்னர் வண. சீலவன்ஸநாயக தேரோ சாட்சியமளிக்கையில்; சகல தினசரி, வார, மாத, வருடபத்திரிகைகளை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் இதற்கு ஒரு மக்கள் பாதுகாப்பு சபை நிறுவப்படவேண்டுமென்றும் கூறினார்.

# மாணவர் நடத்திய கூட்டத்தை பொலிசார் கலைத்தனர்

கொழும்பு, செவ்வாய்

வித்தியோதய பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று பல்கலைக்கழக வளவுக்குள் கூட்டம் ஒன்று நடத்தினர். ஆனால் கடந்த சனிக்கிழமை அங்கு நடைபெற்ற குழப்பத்தின் பின்னர் பல்கலைக்கழக வளவில் காவல் செய்து வந்த பொலிசார் மாணவர்களை கலைத்தனர்.

வித்தியோதய பல்கலைக்கழக பிக்கு மாணவர்களுக்கும், சாதாரண மாணவர்களுக்குமிடையில் நடைபெற்ற கைகலப்பைத் தொடர்ந்து பல்கலைக்கழக ஒழுங்கு நிர்வாக சபையால் நியமிக்கப்பட்ட குழு இம்மாதம் 29-ந் திகதி வரை அதுசம்பந்தமான சாட்சியங்களை தபால் மூலம் பெற்றுக் கொள்ளும் எனவும், நேரடியாக சாட்சியமளிக்க விரும்புவோர் குழுவிடம் அறிவிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண மாணவர் சங்கம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தங்கள் சங்கம் கத்தோலிக்க இயக்கம் என்ற ஸ்தாபனம் ஒன்றுடன் தொடர்பு கொண்டிருப்பதாகச் சாட்டப்பட்ட குற்றம் முற்றிலும் பொய்யானதென தெரிவிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க இயக்கத்தை இதற்குள் இழுத்து கைலப்புக்கு ஏதுவாக இருந்த உண்மையான காரணத்தை மூடி மறைக்க முயற்சி செய்யப்படுவதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மாணவர் சங்கம் எட்டுக் கோரிக்கைகளையும் வெளியிட்டுள்ளது.

துறைமுகத்தில்

# வேலைகள் ஸ்தம்பிதம்

கொழும்பு, செவ்வாய்

'ஒப்பரேட்டர்ஸ் யூனிய'னைச் சேர்ந்த தொழிலாளர்கள் நேற்றைய தினம் சிறிய அளவில் வேலைநிறுத்தம் செய்வதால் கொழும்பு துறைமுகத்தில் வேலைகள் ஸ்தம்பிதமாயின. சரக்குகளை கப்பல்களிலிருந்து இறக்கும் தொழிலாளர்கள் சிலரும் நேற்று வேலைநிறுத்தம் செய்தனர். படகோட்டிகளும், லோஞ்சு ஓட்டுபவர்கள் சிலரும் தங்கள் மதியபோசனம் சம்பந்தமான பிரச்னை ஒன்றையிட்டு வேலைநிறுத்தம் செய்தனர். இவ்விதம் மூன்று பகுதித் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தமையால் துறைமுக வேலைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

கொழும்பு துறைமுகத்தின் நாலு பக்க வாசல்களும் நேற்று இருளில் மூழ்கிக் கிடக்கக் காணப்பட்டன. வெளிச்ச வீடுகளுக்கு ஒளி ஏற்றும் கடமையைச் செய்யும் தொழிலாளர்களை ஏற்றிச் செல்ல படகுகளோ அல்லது லோஞ்சுகளோ இல்லாததே இதற்குக் காரணமாகும்.

ஒப்பரேட்டர்களின் வேலைநிறுத்தத்தால் துறைமுகத்தின் பல பகுதிகள் இருளில் மூழ்கிக் கிடந்தன. நேற்று கொழும்பு துறைமுகத்துக்கு ஒரு பிரயாணிகள் கப்பலும் சரக்குக் கப்பலும் வரவிருந்தன. ஆனால் அடையாளம் கொடுப்பதற்கு எவரும் இல்லாத காரணத்தால் அவை வரமுடியவில்லை.

வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மதிய போசனத்திற்கு மரக்கறி மட்டும் வழங்கப்படுவதே இந்த சிறு வேலைநிறுத்தத்துக்குக் காரணமாகும். முன்பு கொடுத்தது போல சாப்பாட்டில் மீனும் சேர்க்கப்படவேண்டும் என்பதே இவர்களின் கோரிக்கையாகும்.

## புத்தக உருவில் சேர் ஜோன் சொற்பொழிவுகள்

கொழும்பு, செவ்வாய்

சேர் ஜோன் கொத்தலாவலையின் சொற்பொழிவுகளைக் கொண்ட ஒரு புத்தகம் விரைவில் வெளியிடப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சொற்பொழிவுகளைத் தொகுத்து வெளியிட்ட அரசாங்க அதிகாரி ஒருவரே இதையும் தொகுத்து வெளியிடும் முயற்சியிலீடுபடுவார்.

## ஏதென்ஸில் பூமியதிர்ச்சி

ஏதன்ஸ், பெப். 25

ஏதன்ஸில் நேற்று பூமியதிர்ச்சி ஏற்பட்டது. சேதவிபரம் அறிவிக்கப்படவில்லை.

(5-ம் கலத் தொடர்ச்சி)

முந்தி யுலகம் படைத்தான் தன்னை மூவா முதலாய மூர்த்தி தன்னைச், சந்தவெண் திங்களணிந்தான் தன்னைத் தவநெறிகள் சாதிக்க வல்லான் தன்னைச், சிந்தையில் தீர்வினையைத் தேனைப் பாலைச் செழுங்கெடில வீரட்டம் மேவினானை, எந்தை பெருமானை யீசன் தன்னை ஏழையேனான் பண்டிகழ்ந்த வாறே.

—திருநாவுக்கரசர்.

## ஐயாறன் எழுதுவது

ஆசியாவிலேயே மிகப் பெரிய நாடான சீனத்தின் பிரதமர் சூ-என்-லாய் இன்று நமது சின்ன நாடான இலங்கைக்கு 58 பேருடன் விஜயம் செய்கிறார். நமது பச்சை விரோதியாயினும் நமது வீடு தேடிவருபவரை 'வருக' என்று அன்புடன் அழைத்து உபசரிக்கவேண்டியது நமது மேலான பண்பு. ஆகவே அவரை 'வருக' என்று வரவேற்கின்றோம்.

* * *

சீனப் பிரதமர் சூ-என்.லாய் இங்கு வருவது இது முதல் தடவையல்ல. ஏற்கெனவே ஒரு முறை இங்கு வந்து பழக்கமானவர். ஆனால் அப்போது இவ்வளவு பேருடன் வரவில்லை. இன்று சின்ன நாடான இலங்கைக்கு இவ்வளவு கோஷ்டியுடன் அவர் வருவானேன் என்று ஓரன்பர் சந்தேகத்துடன் கேட்கின்றார். அவருக்கு என்ன பதில் சொல்லுவதென்பது தெரியவில்லை.

முக்கிய வேலைகள் இல்லாவிட்டால் இவ்வளவு பேரை அவர் தம்முடன் அழைத்துவரமாட்டார். எப்படியும் இப்பெரிய கோஷ்டிக்குத் தக்க வசதிகள் அளித்து நான்கு நாள் உபசரிப்பதென்பது பெரிய பொறுப்புத்தான். இதை இலங்கை அரசாங்கம் சரிவர நிறைவேற்றுமென்றே நம்புவோம்.

* * *

ஹொரகொல்லையிலே பண்டாரநாயக்கா சமாதிக்கு மரியாதை செலுத்துவதைத்தவிர, கொழும்பைவிட்டு சூவும் அவரது கோஷ்டியினரும் நான்கு நாட்களும் வேறெங்கும் செல்லமாட்டார்களாம். கண்டிக்குக் கூடச் செல்லவில்லை. ஏன்? ஏதாவது எதிர்ப்பு ஆரவாரங்கள் ஏற்படலாமென்ற அச்சமா? அல்லது வேறு என்ன காரணம்?

எப்படியும் அவர் கொழும்பிலே வெள்ளிக்கிழமையன்று சுதந்தரச் சதுக்கத்திலே தொழிற் சங்கக் கூட்டத்தில் "மாறும் சமுதாயத்தில் தொழிலாளரின் பங்கு" என்னும் விஷயம்பற்றி பேசுகின்றாராம். நமது தொழிலாளருக்கு அவர் என்ன புதிய யோசனை கூறப்போகிறாரோ தெரியவில்லை. பல காதுகளும் அவர் கூறுவதைக் கூர்ந்து கேட்கும்.

* * *

நாளை வியாழக்கிழமை லங்கா-சீன நட்புச் சங்கத்தார் தட்ரபேன் ஹோட்டலில் அவருக்கு ஒரு வரவேற்பு உபசாரமளிக்கின்றனர். அதிலும், கவர்னர் ஜெனரல் அளிக்கும் விருந்திலும், பின்னர் சனியன்று அவர் அளிக்கும் பதில் விருந்திலும் அவர் பேசக் கூடும்.

ஏற்கெனவே நமது ரப்பரை வாங்கிக்கொண்டு அரிசி கொடுக்கிறது சீனம். ரயில் பெட்டிகள் பலவற்றை அனுப்பியுள்ளது. இரு தேசங்களுக்கும் வர்த்தக உறவைப் பலப்படுத்துவதுடன், அதிகமான உதவிகளை சீனம் இச்சமயம் அளித்து, நமது பொருளாதாரக் கஷ்டத்தைத் தீர்க்க உதவலாமென்று ஓரன்பர் தெரிவித்தார்.

ஆனால் பெறும் உதவிகளுக்கு பதில் நாம் திருப்பி என்ன செய்யப்போகிறோம்? திருப்பி போதிய உதவி அளிக்க முடியாவிடில், நாம் அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாகமாட்டோமா? என்றாலும் சீனத்துக்கும் இந்தியாவுக்கும் மீண்டும் நட்புறவு ஏற்படுத்தும் கைங்கரியத்தில் இலங்கை வெற்றி பெறுமாயின், அதுவே நாம் செய்யக்கூடிய மிகவும் பெரிய உதவியல்லவா? அதைத்தான் பிரதமர் சூவும் நம்மிடம் எதிர்பார்க்கிறாரல்லவா?

(4-ம் கலம் பார்க்க)

# தென்கிழக்காசியாவில் யுத்தம் எந்த நேரத்திலும் ஆரம்பிக்கலாம்!

## மலேசியா தகராறு குறித்து பிரதமர் துங்கு எச்சரிக்கை

### போர்ணியோ யுத்தநிறுத்த பேச்சுக்கு வருமாறு மலேசியா அழைப்பு

கோலாலம்பூர், பெப். ?

**போர்ணியோ யுத்தநிறுத்த உடன்பாடு குறித்து பேச்சுகள் நடத்த வருமாறு இந்தோனேஷியாவையும் பிலிப்பைன்ஸையும் மலேசியா கேட்டுள்ளது. நேற்று கோலாலம்பூரில் நடைபெற்ற ஒரு அவசர மந்திரிசபைக் கூட்டத்துக்குப் பின்னரே மலேசியா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. போர்ணியோ யுத்தநிறுத்தம்பற்றிய பேச்சுகள் அவசரமாக அதிவிரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் மலேசியா தெரிவித்துள்ளது.**

போர்ணியோ பகுதியில் நடைபெற்றுவரும் சம்பவங்கள் குறித்து மலேசியப் பிரதமர் திரு. துங்குஅப்துல் ரஹ்மான் நேற்று தெரிவிக்கையில் இந்தோனேஷிய கொரில்லாக்கள் மலேசிய எல்லைகளிலிருந்து அகற்றப்பட வேண்டுமென்றும் அவர்களுக்கு உணவு விநியோகிக்கச் செல்லும் விமானங்கள் மலேசிய எல்லை மீதாகப் பறக்கக்கூடாதென்றும் கூறினர். "இதுபற்றி இந்தோனேஷியாவிடம் நாம் ஆட்சேபனை தெரிவித்துள்ளோம். மீறப்பட்டால் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி நேரிடும்" என்றும் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் கூறினர்.

தென்கிழக்காசியாவில் போர் மேகங்கள் திரண்டு கொண்டு வருகின்றன. யுத்தம் எந்தச் சமயத்திலும் ஆரம்பிக்கலாம் என்றும் மலேசியப் பிரதமர் துங்கு அப்துல்ரஹ்மான் எச்சரிக்கை செய்தார்.

இந்தோனேஷிய வெளிவிவகாரமந்திரி டாக்டர் சுபந்திரியோ நேற்று நிருபர்களிடம் தெரிவிக்கையில், இந்தோனேஷியாவிலுள்ள கொரில்லாக்களுக்கு உணவு விநியோகிக்கும் விமானங்கள் இந்தோனேஷிய எல்லைமீது பறப்பதை தவிர்க்க முடியாததொன்றாகும் என்று கூறினர்.

மலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் வெளியுறவுமந்திரிகளைக் கொண்ட முத்தரப்பு மகாநாடு இம்மாத இறுதிக்குள் கூட்டப்பட வேண்டுமென்று தாய்லாந்தை மலேசியா கோருமெனத் தெரிய வருகிறது.

இதற்கிடையில் போர்ணியோவில் நேற்று ஏற்பட்ட கைகலப்பில் நால்வர் மாண்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாண்டவர்களில் ஒருவர் பிரிட்டிஷ் வீரர் என்று கூறப்படுகிறது.

கடந்த மாதம் பாங்காக்கில் நடைபெற்ற மலேசிய, இந்தோனேஷிய, பிலிப்பைன்ஸ் வெளிவிவகார மந்திரிகள் மகாநாட்டில் போர்ணியோ யுத்தநிறுத்த உடன்பாடு ஏற்பட்டதென்பதும் யுத்தநிறுத்த உடன்பாட்டை தாய்லாந்து வெளிவிவகார மந்திரி கண்காணித்து வருவதும் வாசக நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.



## மக்னமாரா சைகோன் செல்வார்

வாஷிங்டன், பெப். 25

அமெரிக்க பாதுகாப்பு காரியதரிசி திரு. மக்னமாரா இம்மாத இறுதியில் சைகோன் செல்லவிருக்கிறார். சைகோனில் அமெரிக்கக் கொள்கைகள் எப்படி அமுல் நடத்தப்படுகிறது என்பதை நேரில் அறியும் பொருட்டே அவர் அங்கு செல்கிறார்.

## 'சமாதானமாகத் தீர்க்குக'

அடிஸ்அபாபா, பெப். 25

இந்தோனேஷிய — மலேசிய தகராறு சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டுமென்று எதியோப்பிய சக்கரவர்த்தி தெரிவித்துள்ளார்.

## சிங்கப்பூர் பிரதமர்

புதுடில்லி, பெப். 25

சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவான் யூ இன்று புதுடில்லி வந்து சேர்ந்தார். 26-ம் திகதி அவர் கொழும்புக்குப் புறப்படுவார்.

சீனப்பிரதமர் சூ-என்-லாய் நேற்று டாக்கா போய்ச் சேர்ந்தார்.

## புதிய ரயில் சேவை

புதுடில்லி, பெப். 25

பிரயாணிகளின் வசதிகளை முன்னிட்டு ல் புதிய ரயில் பாதைகள் விரைவில் அமைக்கப்படுமென்றும் புதிய ரயில் சேவைகள் ஏப்ரல் மாதம் முதல் நடைபெறுமென்றும் இந்திய லோகசபையில் நேற்று அறிவிக்கப்பட்டது.

பாக். துருப்புக்கள் சுட்டதில்

# பொலிஸ்காரர் சிலர் கொல்லப்பட்டனர்

### விசாரணை நடத்துமாறு இந்தியா கோரிக்கை

புதுடில்லி, பெப். 25

கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தானுக்குச் சொந்தமான அஸாத் காஷ்மீரிலிருந்து பாகிஸ்தானிய துருப்புகள், இந்திய எல்லைக்குள் பிரவேசித்து, 23 இந்திய பொலிஸாரைத் தாக்கினர் என்றும் இவர்களிற் சிலர் கொல்லப்பட்டனர் சிலர் கடத்திச் செல்லப்பட்டனர் என்றும் பாதுகாப்பு மந்திரி திரு. சாவண் தெரிவித்துள்ளார்.

இந்திய ரோந்து அணிமீது சுட்டு, போர்நிறுத்தக் கோட்டையும் மீறிய அவர்களின் செயல் குறித்து உடனடியாக விசாரணை நடத்த வேண்டுமென்று நாம் ஐ. நா. மேற்பார்வையாளர்களைக் கேட்டுள்ளோம் என்றும் திரு. சாவண் தெரிவித்தார்.

**பாகிஸ்தான் அறிவிப்பு**

இந்திய பொலிஸ்காரர்கள் மீது பாகிஸ்தானிய துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது குறித்து பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி திரு. புட்டோ நேற்றுத் தெரிவிக்கையில்; இந்தியப் பொலிஸார் பாகிஸ்தான் எல்லைக்குள் பிரவேசித்தனர் என்றும் தற்பாதுகாப்புக்காகவே அவர்களை பாகிஸ்தானிய துருப்புகள் சுட நேர்ந்தது என்றும் கூறினர்.

## அதிசய கண்ணன்!

திருச்சூர், பெப். 25

சேதுபுழா என்ற இடத்திலுள்ள ஆலமரமொன்றினடியில் ஸ்ரீ கிருஷ்ண பகவானின் உருவம் தானகவே உண்டாகியிருக்கும் பேரதிசயத்தைக் காணும் பொருட்டு தினமும் திரளான மக்கள் இங்கு குழுமுகிறார்கள்.

நேற்று முன்தினம், பத்திரிகை நிருபர்கள் பலர் இந்த அதிசயத்தைக் காணச் சென்றார்கள். சுமார் 20 கெஜ தூரத்திலிருந்தே இக் கண்ணனின் உருவம் தெரிகிறதாம். ஆனால் பகலில் அருகில் சென்றால்கூட இவ்வுருவத்தைக் காண முடியவில்லை, மரத்தில் செதுக்கியதற்கோ அல்லது வர்ணம் தீட்டிய தற்கோ அடையாளம் எதுவுமில்லாத இவ்வுருவத்தை இரவுவேளைகளில் எண்ணெய் விளக்குகளின் உதவியுடன் பார்க்கலாம்.

தமிழ் நாட்டில்

## ஓரே பார்வையில் 29 நகரசபை தேர்தல் முடிவுகள்

சென்னை, பெப். 25

அண்மையில் நடைபெற்ற 29 நகரசபைத் தேர்தல்களின் விபரம் வருமாறு:

சென்னை (ஸ்தானங்கள் 100) தி.மு.க. - 49; காங்கிரஸ் - 40; முஸ்லிம் லீக் - 5; சுயேச்சை - 4; கம்யூனிஸ்ட் - 1.

செங்கற்பட்டு (ஸ்தானங்கள் 20) காங்கிரஸ் - 10; தி.மு.க. - 5; சுயேச்சை - 5; சுத - 0; கம்யூனிஸ்ட் - 0.

காஞ்சீபுரம் (ஸ்தானங்கள் 32) காங் - 12; திமுக - 11; சுயே - 8; சுத - 1; கம் - 0.

திருவள்ளூர் (ஸ்தானங்கள் 16) காங் - 8; திமுக - 5; சுயே - 3; சுத - 0; கம் - 0.

திருவொற்றியூர் (ஸ்தானங்கள் 20) காங் - 14; திமுக - 4; சுயே - 1; சுத - 1; கம் - 0.

சிதம்பரம் (ஸ்தானங்கள் 24) காங் - 8; திமுக - 7; சுயே - 9; சுத - 0; கம் - 0.

கடலூர் (ஸ்தானங்கள் 32) காங் - 17; திமுக - 9; சுயே - 6; சுத - 0; கம் - 0

திண்டிவனம் (ஸ்தானங்கள் 20) காங் - 13; திமுக - 2; சுயே - 3; சுத - 1; கம் - 1.

விழுப்புரம் (ஸ்தானங்கள் 24) காங் - 0; திமுக - 6; சுயே - 18; சுத - 0; கம் - 0

ராசிபுரம் (ஸ்தானங்கள் 20) காங் - 12; திமுக - 8; சுயே - 0; சுத - 0; கம் - 0.

சேலம் (ஸ்தானங்கள் 36) காங் - 21; திமுக - 13; சுயே - 2; சுத - 0; கம் - 0

கரூர் (ஸ்தானங்கள் 28) காங் - 16; திமுக - 4; சுயே - 5; சுத - 0; கம் - 3.

புதுக்கோட்டை (ஸ்தானங்கள் 28) காங் - 12; திமுக - 10; சுயே - 3; சுத - 0; கம் - 3

ஸ்ரீரங்கம் (ஸ்தானங்கள் 24) காங் - 16; திமுக - 1; சுயே - 4; சுத - 3, கம் - 0.

திருச்சி (ஸ்தானங்கள் 36) காங்கிரஸ் - 26; திமுக - 2; சுயே - 2; சுத - 0; கம் - 6.

அருப்புக்கோட்டை (ஸ்தானங்கள் 28) காங் - 9; திமுக - 3; சுயே - 16; சுத - 0; கம் - 0.

தேவகோட்டை (ஸ்தானங்கள் 20) காங் - 12; திமுக - 1; சுயே - 5; சுத - 2; கம் - 0

ராஜபாளையம் (ஸ்தானங்கள் 32) காங் - 20; திமுக - 1; சுயே - 11; சுத - 0; கம் - 0.

காரைக்குடி (ஸ்தானங்கள் 24) காங் - 13; திமுக - 1; சுயே - 1; சுத - 8; கம் - 1.

சிவகாசி (ஸ்தானங்கள் 20) காங் - 16; திமுக - 0; சுயே - 4; சுத - 0; கம் - 0

ஸ்ரீவில்லிபுத்தூர் (ஸ்தானங்கள் 28) காங் - 20; திமுக - 3; சுயே - 5; சுத - 0; கம் - 0.

விருதுநகர் (ஸ்தானங்கள் 28) காங் - 0; திமுக - 0; சுயே - 26; சுத - 0; கம் - 2.

ராமநாதபுரம் (ஸ்தானங்கள் 20) காங் - 10; திமுக - 1; சுயே - 7; சுத - 0; கம் - 2

கொளச்சல் (ஸ்தானங்கள் 16) காங் - 0; திமுக - 0; சுயே - 16; சுத - 0; கம் - 0.

குளித்துறை (ஸ்தானங்கள் 16) காங் - 7; திமுக - 0; சுயே - 7; சுத - 0; கம் - 2.

நாகர்கோவில் (ஸ்தானங்கள் 32) காங் - 17; திமுக - 3; சுயே - 10; சுத - 0; கம் - 2.

பத்மநாபபுரம் (ஸ்தானங்கள் 16) காங் - 9; திமுக - 0; சுயே - 5; சுத - 0; கம் - 2.

குன்னூர் (ஸ்தானங்கள் 20) காங் - 10; திமுக - 5; சுயே - 5; சுத - 0; கம் - 0.

உதகை (ஸ்தானங்கள் 28) காங் - 17; திமுக - 1; சுயே - 6; சுத - 4; கம் - 0.

## பகைநாகர் நடவடிக்கை

நாகலாந்து, பெப். 25

நாகலாந்தில் கலகம் நீடிக்கிறதென்றும் பகைநாகர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன என்றும் இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெனரல் நீவின் வந்த காரணம்

புதுடில்லி, பெப். 25

அண்மையில் பர்மிய அதிபர் ஜெனரல் நீவின், இந்தியாவுக்கு விஜயம் செய்தபொழுது சீன, இந்தியப் பிரதமர்கள் சந்திக்கவேண்டுமென பிரதமர் நேருவிடம் ஜெனரல் நீவின் யோசனை கூறியதாக சில பத்திரிகைகளில் வெளியான செய்தியை வெளிவிவகார இலாகா அதிகாரி ஒருவர் மறுத்தார்.

பிரதமர் நேருவின் உடல்நிலைபற்றி விசாரிக்கவே ஜெனரல் நீவின் வந்ததாக அவரின் விஜய முடிவில் தெரிவிக்கப்பட்டது. இதுவே உண்மை என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## 'நீடிக்கக்கூடாது'

புதுடில்லி, பெப். 25

இந்தியாவுடனான சீன, பாகிஸ்தான் தகராறுகளை நீண்ட காலத்துக்கு விட்டு வைக்க முடியாதென்று திரு. லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்திருந்த கருத்தை இந்தியப் பிரதமர் நேரு நேற்று லோகசபையில் வலியுறுத்திக் கூறினர்.

## பிரிட்டிஷ் பிரதமர் அபிப்பிராயம்

லண்டன், பெப். 25

சைப்ரஸிலிருக்கும் பிரிட்டிஷ் துருப்புக்களின் தொகை சிறிது சிறிதாகக் குறைக்கப்பட வேண்டுமென்ற சைப்ரஸ் அதிபர் ஆர்ச்பிஷப் மகாரியோஸின் யோசனை குறித்து பிரிட்டிஷ் பிரதமர் சர் அலெக்டக்ளஸ் ஹியூம் நேற்று அபிப்பிராயம் தெரிவிக்கையில், சைப்ரஸிலிருந்து பிரிட்டிஷ் படைகள் வெளியேறினல் அங்கு கலகம் அதிகரிக்கலாம் என்றும் சண்டைகள் தொடர்ந்து நடைபெறுமென்றும் கூறினர்.

## ஜோன்ஸன்

கலிபோர்ணியா, பெப். 25

மெக்ஸிகோ அதிபர் லோபஸ் மெதயோஸுடன் இங்கு பேச்சுக்கள் நடத்திய அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் இன்று வாஷிங்டன் திரும்பினர்

## சுத்தமான நீர்

### அமேசன் நதிக்கு முதலிடம்

வாஷிங்டன், பெப். 25

உலகிலுள்ள நதிகளில் அமேசன் நதியில்தான் சுத்தமான நீர் இருக்கிறதென்று அமெரிக்க சர்வே குழு அறிவித்துள்ளது. ரியோ நீக்ரோ நதியில் ஓரளவு சுத்தமானநீர் இருக்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது.

இதுசம்பந்தமாக நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் போது 4,050 மைல் நீளமான அமேசன், ஒரு நிமிடத்துக்கு 3,400 கலன் தண்ணீரை அத்திலாந்திக் சமுத்திரத்திற்குத் தருகிறதென்றும் இவ்வளவு நீர் கங்கோநதியிலும் 5 மடங்கு அதிகமென்றும் மிசிசிப்பி நதியிலும் 12 மடங்கு அதிகமென்றும் தெரியவந்தது.

கொழும்புக் கடிதம்

# சூ-என்-லாயின் விஜயமும் கம்யூனிஸ்ட் பிளவும்

— நமது சிறப்பு நிருபர் —

சீனப் பிரதமர் சூ-என்-லாய் விஜயத்தை எதிர் பார்க்கும் இலங்கை கம்யூனிஸ்டுகளுக்கிடையில் பல பல போராட்டங்கள் நடக்க ஆரம்பித்துள்ளன. சூவுக்கு முன்னணியில் யார் நிற்பதென்பதுதான் உடனடியான பிரச்சினையாகவிருக்கிறது. இதற்குக் காரணம் சீனக் கம்யூனிஸ்டுகள், ரஷ்ய கம்யூனிஸ்டுகள் என்ற இரண்டு கோஷ்டியினர் திக்குத் திக்காக நிற்பதுதானென்பது சொல்லாமலே விளங்கும்.

கம்யூனிஸ்ட் வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் வேட்டுக்களில் ஒன்று இலங்கையிலுள்ள சீனக் கம்யூனிஸ்டுகள், ரஷ்ய கம்யூனிஸ்டுகளான பீட்டர் கெனமன், விக்கிரமசிங்க கோஷ்டியினர் சூ-என்-லாயை சந்திக்கமாட்டார்களென்றும், பகிஷ்கரித்துவிடுவார்களென்றும் கூறுகிறது. இந்தப் புரளியை ஆரம்பித்திருப்பதற்குக் காரணமும் இல்லாமலில்லை. பகிஷ்காரமென்பது பற்றி கனவுகூடக் காணாத கெனமன் கோஷ்டியினரைப் பற்றி இப்போதே இப்படியான அவிட்டுவாணத்தை விட்டால் குட்டையைக் குளப்பினதுமாதிரியிருக்குமென்றும் சீனக் கம்யூனிஸ்டுகள் நம்புகின்றனர். நாம் ஆரம்பத்திலே எச்சரிக்கை செய்தபடியினால்தான் நிலைமை திரும்பியது எனவும் இவர்கள் பிரசாரம் செய்யலாமல்லவா?

### தமிழரசாருக்குத் தெரிந்த விஷயம்

சிராவஸ்தியில் அந்தரங்கமாக நடைபெற்றதாக அம்பலமாகியுள்ள வேடிக்கைகள்பற்றி ஆரம்பத்திலேயே வெளியாக்கிய பெருமை தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த இனம் எம். பி. ஒருவரையே சேர வேண்டும். சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னரேயே இந்த எம். பி. "புரபியுமோக்களும், கீலர்களும்" என்று பார்லிமெண்டிலேயே குரல் கொடுத்திருந்தார். என்னத்தைச் செய்தும் இந்த எம். பி. இரகசியத்தை அந்தச் சமயத்தில் அம்பலமாக்கவில்லை.

சகபந்துக்களை ஒரு சமயம் மானபங்கப்படுத்தக் கூடாது என்ற பொறுப்புணர்ச்சியாலோ என்னவோ அவர் இப்படி விட்டுவிட்டார். இந்த எம். பி. பார்லிமெண்டின் நாற்திசைகளுக்கும் கேட்கும்படி குரலெழுப்பிய சமயம் "கேவலம், வெட்கக்கேடு, மானம் பறிபோகிறது" என்பது போன்ற வார்த்தைகளைக்கூட உபயோகித்து தலைமேல் கைவைத்துக் கூக்குர விட்டார்

### இந்திய ஹைகமிஷன் நூல் நிலையம்

இங்கிருக்கும் ஸ்தானிகராலயங்களிலெல்லாம் அந்த அந்த நாடுகளில் பிரசுரம் செய்யப்படும் புத்தகங்களைக்கொண்ட நூல்நிலையங்கள் இருக்கின்றன. அவைகளில் நல்ல முறையில் அமைந்திருப்பதென்ற பெயரை அமெரிக்க நூல் நிலையத்திற்குச் சூட்டினால் கடைசி ஸ்தானத்தை இந்திய நூல் நிலையத்துக்குக் கொடுத்துவிடலாம்.

சுமார் 10,000 மைல்களுக்கப்பால் உள்ள அமெரிக்காவில் வெளியாகும் தினப் பத்திரிகைகளை நாம் சுடச்சுடப் பார்க்கக்கூடிய வசதியைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அடுத்த வீடான இந்தியா சீனக்காரன் எல்லையில் புகுந்தபோது தூங்கிக்கொண்டிருந்ததுபோல தூங்கிக்கொண்டிருக்கிறது. 10 தினங்கள் போனாலும் பத்திரிகை ஒன்றைப் பார்க்கமுடியாது. வெட்கம்!

இதிலும் பார்க்க மோசமான நிலையில் அங்கு வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்கள் உள்ளன. இந்தியாவின் சித்திரக்கலைப் புத்தகங்கள் சின்னுபின்னமான நிலையில் வைக்கப்பட்டு சீரழிகின்றன. காந்திஜியைப் பற்றிய விலைமதிப்பற்ற அரிய புத்தகங்கள் கண்ணீர் வடிக்கின்றன. இப்படியான சீர்கேட்டாலோ என்னவோ நூல் நிலையத்தைக் கண்டு அங்கு செல்ல நாணுகிறார்கள்.

### பிராந்திய சார்பற்ற மகாநாடு

பிராந்தியச் சார்பற்ற நாடுகளின் மகா நாட்டுக்கான பூர்வாங்க கூட்டத்தை இங்கு கூட்ட வேண்டுமென்ற இலங்கையின் விருப்பம் இப்போது கஷடத்தில் கொண்டுபோய் விட்டிருக்கிறது போலத் தெரிகிறது. பூர்வாங்க கூட்டத்திற்கு 25 நாடுகளிலிருந்து ஸ்தானிகர்கள் அந்தஸதுள்ளவர்கள் தமது ஆலோசகர்களுடன் இங்கு வரவிருக்கிறார்கள். ஒரு கோஷ்டியில் நால்வர் இருந்தாலும் மொத்தம் 100 பேர்வரையிலாகிவிடும். இவர்களுக்கெல்லாம் தங்குவதற்கு வசதியில்லாமல் "வாருங்கள்" என்றழைத்து விட்டதுடன் பிரச்சினை தீர்ந்து விட்டதென்று அரசாங்கம் கருதியதோ தெரியாது. இப்போதுதான் விழிக்கிறது.!

அரசாங்கத்தின் திறைசேரி காய்ந்து, வரண்டு போயிருக்கும் இந்தச் சமயத்தில் தனது கௌரவத்துக்காக ஆரம்ப கூட்டத்தை இங்கு நடத்தி லட்சக்கணக்கில் செலவிட வேண்டுமோவென்று எதிர்க்கட்சி எதுவும் கேட்டால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

—

## 200 பேர் நிர்க்கதி

### விவசாயப்பண்ணை மூடியதால்

ரத்மலானை, செவ்.

ரத்மலானையிலுள்ள விவசாயப்பண்ணையை விவசாய இலாகா மூடிவிட்டதால் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் உட்பட 40 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் நிர்க்கதியாக விடப்பட்டுள்ளனர்.

இந்த விவசாயப்பண்ணையில் தாம் குடியிருந்த காணிகளைத் தமக்குத் தருமாறு மேற்படி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து விவசாய இலாகாவைக் கோரிவந்திருந்தார்கள் இவ்விதம் தமக்கென ஒதுக்கி தரப்படும்காணிகளில் தாம் தனித்தனியாக விவசாயம் செய்யலாமென்றும் தெரிவித்திருந்தார்கள். ஆனால் இது குறித்து எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ் விவசாயப்பண்ணை மூடப்பட்டதால் இதில் பயிரிடப்பட்ட மரவள்ளிக்கன்றுகள் பிடுங்கி எறியப்பட்டன.

இப்பகுதி எம். பி. திரு. சோமவீர சந்திரசிறி இந்த விவசாயப்பண்ணையை மீண்டும் திறக்கச்செய்ய முயற்சிகள் எடுத்துவருகிறார்.

——

## "பேயை விரட்டி விட்டோம்"

புதுடில்லி, பெப். 24

சமீபத்தில் பாதுகாப்பு சபையில் நடைபெற்ற விவாதத்தில், "காஷ்மீரில் சர்வ ஜன வாக்கெடுப்பு என்ற பேயை" விரட்டிவிட்டதாக கல்வி மந்திரி திரு. சக்ளா கூறினார். பாரதத்துக்கே அங்கு அதிக ஆதரவு இருந்ததெனவும் பார்லிமெண்டின் இரு சபைகளிலும் பேசிய திரு. சக்ளா அறிவித்தார்.

——

### பாக். அங்கீகரிப்பு

கராச்சி, பெப். 25

ஸான்ஸிபார் அரசாங்கத்தை பாகிஸ்தான் அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

# பொலிஸாரின் "சாராயவேட்டை" கைகலப்பில் முடிந்தது

## இன்ஸ்பெக்டர் ஆஸ்பத்திரியில்; இருவருக்கு ரிமாண்ட்

நீர்கொழும்பு, செவ்.

சட்ட விரோதமாகச் சாராயம் தயாரிக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கச் சென்ற ஒரு பொலிஸ் கோஷ்டியினருக்கும் சம்பந்தப்பட்ட சாராயம் தயாரிப்பதில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சிலருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பு காரணமாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபபட்டார்.

புத்தளம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ராகுல சில்வா, சில பொலிஸ் கான்ஸ்டபிள்களுடன் கடந்த புதன்கிழமை இரவு ஏழு மணியளவில் கடயாமட எனும் கிராமத்தை நோக்கிச் சென்றார். இக்கிராமத்தில் சட்ட விரோதமாக சாராயம் தயாரிப்பதில் சிலர் சம்பந்தப்பட்டிருக்கிறார்களென்று அறிந்தே இப் பொலிஸ் கோஷ்டி அங்குசென்றது.

இக்கிராமத்தில் செல்லத்துரை என்பவரின் கடையில் சட்டவிரோதச் சாராயம் இருப்பதாகச் சந்தேகப்பட்டு அங்கு சோதனைபோடச்சென்ற பொழுது, பொலிஸாருக்கும் கடைக்காரருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இந்தக் கைகலப்பின் போது பொலிஸ் வீரர்கள் தடிகளாலும் கற்களாலும் போத்தல்களாலும் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இக்கைகலப்பு 'உச்சக்' கட்டத்தில் இருந்த சமயம் வேறு சில பொலிஸ் வீரர்கள் அங்கு வரவே சம்பந்தப்பட்ட பலர் ஓடி விட்டனர்.

இக்கைகலப்பு காரணமாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ராகுல சில்வா படுகாயங்களுடன் சிலாபம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர்களான மாரிமுத்துவும் அவரின் மகன் செல்லத்துரையும் அடுத்த மாதம் 5-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

——

## கடனுதவியும் சிங்கள தேர்வும்

கொழும்பு, செவ்வாய்

வீடுகட்டுவதற்கு அரசாங்கத்திடமிருந்து கடன் பெற விரும்பும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் தாம் சிங்கள தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையத் தவறினால் வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன் கடன்பணமாகச் செலுத்த வேண்டிய பாக்கித்தொகையைச் செலுத்துவதாக உறுதியளிக்க வேண்டும், இல்லாவிடில் இந்தப் பாக்கித் தொகை பென்ஷன் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

வீடுகட்டக் கடன் உதவி பெறவிரும்பும் சிங்கள தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையாதவர்களும் சிங்களத்தில் தேர்ச்சி பெற இருவருட அவகாசம் கொடுக்கப்பட்டவர்களும் மேற்கண்ட விபரம் தெரிவிக்கும் விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்யும்படி கோரப்படவிருக்கிறார்கள்.

இதுபற்றிய சுற்றறிக்கையொன்று சகல நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் இலாகா தலைவர்களுக்கு திறைசேரியால் அனுப்பப்பட்டுள்ளது.

——

## கிறிஸ்தவ அகதிகள்

லண்டன், பெப். 25

சமீப காலத்தில் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 50,000—80,000 கிறிஸ்தவ அகதிகள் அஸாம்பகுதிக்குச் சென்றிருப்பதாக உலக சேர்ச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# ஹாட்லி கல்லூரிக்கு இன்னிங்ஸ் வெற்றி

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜானக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஹாட்லி கல்லூரி ஒரு இன்னிங்சாலும் 18 ரன்களாலும் வெற்றியீட்டியது.

ஹாட்லி ஒரே ஆட்டத்தில் 223 ரன்களை எடுத்தது. மகாஜனா முதல் ஆட்டத்தில் 83 ரன்களையும், 2-ம் ஆட்டத்தில் 122 ரன்களையும் எடுத்தது.

ஹாட்லியைச் சேர்ந்த மா. நடராசசுந்தரம் 95 ரன்களை எடுத்ததுடன் அடுத்தடுத்து நாலு விக்கட்டுக்களை கைப்பற்றித் தனது திறமையை காட்டினர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை ஒரு இன்னிங்சாலும் 103 ஓட்டங்களாலும் தோற்கடித்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரியை ஒரு இன்னிங்சாலும் 167 ஓட்டங்களாலும் தோற்கடித்து வெற்றிகளை ஈட்டியுள்ளது.

# துணுக்காய் கிராமசபைதேர்தலில் இருவர் போட்டியின்றித் தெரிவு

துணுக்காய், செவ்

துணுக்காய் கிராம சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் திரு. த. ச துரையப்பாவினுல் துணுக்காய் கிராமசபை மண்டபத்தில் வைத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆறுவட்டாரங்களிலும் 16 பேர் போட்டியிடுகின்றூர்கள். 1-ம், 3-ம் வட்டாரத்திற்கு அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

**1-ம் வட்டாரம்**

க. சோமசுந்தரம் (போட்டியில்லை)

**2-ம் வட்டாரம்**

ஐ. ஐயாத்துரை, க. சுப்பிரமணியம். (தற்போதய உபதலைவர்)

**3-ம் வட்டாரம்**

க. முருகேசு. (போட்டியில்லை)

**4-ம் வட்டார்ம்**

நா. ஆழ்வாய்பிள்ளை, இ. செல்லத்துரை, இ. முத்துக்குமாரு, தா. பொன்னுச்சாமி.

**5-ம் வட்டாரம்**

வ. குமாரசாமி, க. வேலுப்பிள்ளை, ஆ. சபாரத்தினம், பொ. சொக்கலிங்கம்.

**6-ம் வட்டாரம்**

என். எஸ். வி. வைத்திலிங்கம், செ. சுந்தரம்பிள்ளை, வி. க. நடராசா, வ. சின்னத்துரை.

## 'அபிவிருத்தி திட்டங்கள்' சனசமூகநிலையங்களே செய்யவேண்டும்

தெல்லிப்பழை, செவ்

"அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கத்தின் உதவிகளை நம்பியிராமல் சனசமூக நிலையங்கள் தாமாகவே செய்து முடிக்கவேண்டும்" என்று மல்லாகம் கிராம சபைத் தலைவர் திரு. க. சிவகுரு மாவிட்டபுரம் பாரதி சனசமூகநிலையத்தின் எட்டாவது ஆண்டு நிறைவு விழாவிற் பேசுகையில் கூறினர்.

சனசமூகநிலைய அருகில் உள்ள திறந்தவெளியரங்கில் நடைபெற்ற ஆண்டுவிழாவிற்கு ஆசிரியர் திரு. பி. முருகையா தலைமைவகித்தார். தலைவர் தமது உரையில் சனசமூக நிலையத்தின் பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

திருவாளர்கள் ஆறுமுகம், அ. செல்வராசா, சு. செல்லத்துரை மு. முத்துலிங்கம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர். நிலைய மாணவரின் யோகாசனக் காட்சியும் திரு. ப. தியாகராசாவின் நூதன கதம்பக்கச்சேரியும் விழாவில் இடம்பெற்றன. புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

போஷகர்: திரு. நா. தம்பையா, தலைவர்: திரு. எம். தில்லையம்பலம், உபதலைவர்: திரு. க. சின்னையா, செயலாளர்: திரு தா. வைரவப்பிள்ளை, துணைச்செயலாளர்: திரு. பொ. சுப்பிரமணியம், தனதிகாரி: திரு. சி. சரவணமுத்து, உபதனதிகாரி: திரு. சி. கிருஷ்ணபிள்ளை, பரிசோதகர்: திரு. ப. சிதம்பரப்பிள்ளை. நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## வானொலிநிகழ்ச்சிகள்

**புதன் 26-2-64**

**கொழும்பு**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 இஸ்லாமியசிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம், 7-15 பேச்சு, விஞ்ஞானம் — வி. கே. நல்லையா, 7-30 வயலின் — சத்தியபாலதேவி நவரத்தினம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 உங்கள் பிரச்சினைகள், 10-15 தேர்ந்தஇசை.

**திருச்சி**

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-30 மணித்திருநாடு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 5-15 திருவாளப்புத்தூர் டி. கே. பக்கிரிசாமிப்பிள்ளை — புல்லாங்குழல், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமசஞ்சிகை, 7-30 செய்திஅரங்கம், 7-45 ரேடியோ நாடகஇசை, 8-00 திரைப்படஇசை, 8-30 வயலின், 8-45 குரல்இசை, 9-45 நாடகவிழா.

## மின்சாரம் தாக்கி மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த 20 வயதுடைய நன்னியர் சுந்தரம் ஒலிபெருக்கியை இணைக்கும்போது, மின்சாரத்தால் தாக்குண்டு, யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் மரணமானுர்.

ஏற்பினுல் மரணம் ஏற்பட்டதாக டாக்டர் வி. கனகசுந்தரம் கூறினுர்.

இயற்கை மரணமென மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## கையெழுத்துப் பிரதி கமிட்டி

புதுடில்லி, பெப். 25

கிடைத்தற்கரிய கையெழுத்துப் பிரதிகளைச் சேகரிப்பதற்காகப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி தலைமையில் ஒரு கமிட்டியை அரசாங்கம் நியமித்திருக்கிறது. மரப்பட்டை, பனை ஓலை, காகிதம் ஆகியவற்றில் பல கையெழுத்துப் பிரதிகள் நாட்டில் ஏராளமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

## பொன்னலைக் கோஷ்டி வெற்றி

சுழிபுரம், செவ்

பொன்னலை - நெல்லியான் சன சமூக நிலைய கோஷ்டியினருக்கும் மூளாய் விளையாட்டுக் கழக கோஷ்டியினருக்கும் இடையே சிநேகிதபூர்வமாக நடைபெற்ற தாச்சிப் போட்டியில் பொன்னலை நெல்லியான் கோஷ்டியினர் மூன்று அதிக பழங்களை எடுத்து வெற்றி பெற்றனர். போட்டி மூளாய் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நடைபெற்றது. பொன்னலை நெல்லியான் கோஷ்டியினர் 6 பழங்களையும் மூளாய் கோஷ்டியினர் 3 பழங்களையும் எடுத்தனர்.

## மூச்சுத்திணறி சிசு மரணம்

ஜாஎலை, செவ்வாய்

ஜாஎலையைச் சேர்ந்த அழகிரியின் 29 நாள் பெண் குழந்தை தாய்ப்பால் குடித்துக்கொண்டிருந்த சமயத்தில் மூச்சுமுட்டி மரணமாகியது.

இறந்த குழந்தையின் தாய் மரண விசாரணையின்போது சம்பவம்பற்றித் தெரிவிக்கையில், தாம் பால் கொடுத்துக்கொண்டிருந்தசமயத்தில் குழந்தை விக்கல் எடுத்ததாகவும் இதைக்கண்டு தாம் குழந்தையின் வாயில் பாலை ஊற்றியதாகவும் உடனே குழந்தை மூச்சுத்திணறி பின்னர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றபோது அங்கு மரணமானதாகவும் தெரிவித்தார்.

## 'விரோதிகளின் வேலை'

ஜெஹாம்பல, செவ்வாய்

'சித்திரதய பல்கலைக்கழகத்தில் பௌத்த பிக்குகளுக்கும் சாதாரண மாணவர்களுக்குமிடையில் இடம் பெற்ற கைகலப்பு புத்த மதத்தின் விரோதிகளின் தூண்டுதலாலேயே நிகழ்ந்துள்ளதென் திவுலபிட்டியா எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

ஹொரம்பலமகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பௌத்த சங்கத்தின் மதிப்பைக் குறைப்பதற்கு நாட்டிலுள்ள ஒரு பகுதியினர் முயற்சி செய்துகொண்டிருப்பதாகவும் திரு ஜெயக்கொடி குறை கூறினுர்.

## தேவை

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விபரம் 1. பண்டகசாலை மனேஜர்.

தகமைகள்:-

குறைந்தது J. S. C. தராதரம் பெற்றவராயிருத்தல் வேண்டும். பண்டகசாலை அனுபவமும், கூட்டுறவுக் கலாசாலைப் பயிற்சியும் உடையவருக்கு விசேட சலுகையுண்டு.

வேதன விபரம்: ரூபா 90/- 3-0 X 15 135-00 (பஞ்சப்படியில்லை.)

பிணை:- ரொக்கம் ரூபா 1000/- அல்லது ரொக்கம் ரூபா 500/- உடன் ஆதனம் ரூபா 1000/-

2. பண்டகசாலை உதவியாள் (விற்பனையாளரல்ல)

சேவைவிபரம்:- மனேஜரோ விற்பனையாளரோ இல்லாதவிடத்து அவர்களுக்காக உதவி செய்யவேண்டும்.

தகமைகள்:- J. S. C. தராதரம் பெற்றிருத்தல்வேண்டும்.

வேதனம்:- 75-00—2-50X15 112-50. (பஞ்சப்படி இல்லை)

பிணை:- ரொக்கம் ரூபா 500/- அல்லது ரொக்கம் ரூபா 250/- உடன் ரூபா 500/- ஆதனமும்

குறிப்பு:- தகுதி, திறமை, வியாபார முன்னேற்றம் முதலியவைகளுக்கேற்ப இருவருக்கும் தனிப்பட்ட சம்பள உயர்வு உண்டு. விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு 8-3-64 க்கு முன் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி,
பொன்னலை ஐ. ப. சாலைச் சங்கம், பொன்னலை,
24-2-64 சுழிபுரம். 1799

## வியாபாரிகளுக்கு எமது அறிவித்தல்

உங்கள் வியாபாரக் கணக்குகளையும், கடிதத் தொடர்புகளையும் தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் நியாயமான கட்டணத்திற்கு செய்துதரலாம். கு. வை. முத்தையா, மாசிலாமணியுவலறிமாட் பின்பகுதி; கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம். 1800

## ஷில்லாங்கில்அமைதி

புதுடில்லி, பெப். 25

ஷில்லாங்கில் அமைதி நிலவுகிறதென்றும் ஊரடங்குச்சட்ட நேரம் குறைக்கப்பட்டுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'நமது கலாசாரத்துக்கு புறம்பானதை விலக்குக'

## டட்லி புத்திமதி

புகம்புகொடை, செவ்

மேல்நாடுகள் மிகவும் முன்னேற்றமடைந்துள்ளன. ஆனுல் ஆன்மீக வளர்ச்சிஅங்கு பெரிதும் குன்றிவிட்டது என எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா புகம்புகொடை ஞாயிறு பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்புவிழாவின் போது பேசுகையில் கூறினர்.

திரு. டட்லி மேலும் பேசுகையில் கூறியதாவது: அபிவிருத்தியடைந்துள்ள மேல்நாடுகளில் உள்ள நல்ல விஷயங்களை இங்குள்ள மக்கள் பின்பற்றுவது புத்திசாலித்தனமானதே. ஆனுல் இதே நேரத்தில் நமது கலாசாரத்துக்குப் புறம்பானவற்றை நாம் விலக்கிக் கொள்ளவேண்டும் என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

பௌத்தமத அலுவல்களிலும் சமய வைபவங்களிலும் எனது முழுநேரத்தையும் செலவிட நான் தயங்கவில்லை. ஆனுல் எனக்கிருக்கும் மற்றப் பொறுப்புகளினுலும் மற்ற அலுவல்களினுலும் நான் இவ்விதம் செய்ய முடியவில்லை.

போர் மூண்டால் உலகிலிருந்து மனிதவர்க்கமே பூரணமாக ஒழிக்கப்படக்கூடிய அளவுக்கு மேல்நாடுகளில் விஞ்ஞானம் துரிதமாக முன்னேறியுள்ளது. அபிவிருத்தி குன்றிய நாடுகளின் பொருளாதார விருத்திக்காக விஞ்ஞானத்தை இலகுவில் பயன்படுத்தலாம். ஆனுல் துரதிர்ஷ்டவசதாக தவருன பாதையில் விஞ்ஞானம் செலுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு தெற்கு முதலாவது எம். பி. திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையில் கூறியதாவது:

அன்னியர் ஆதிக்கத்தின்போது பௌத்தமதம் மிகவும் பாதிக்கப்பட்டது. இந்த நாட்டை ஆண்ட டச்சுக்காரரும் போர்த்துக்கேயரும், பிரிட்டிஷாரும் பௌத்த மதத்தவர்களின் நலன்குறித்து என்றும் அக்கறை கொண்டதில்லை. இலங்கையில் பௌத்த மதத்தைச் சீர்குலைக்க தமது அதிகாரத்தைப் பிரயோகித்தார்கள். பௌத்தமதத்தை இலங்கையிலிருந்து ஒழித்துக்கட்டவும் அவர்கள் முயற்சி செய்தார்கள்.

நியாயமான அளவு அரசாங்க உதவியின்றி எந்த ஒரு மதமும் வாழ முடியாது. யு. என். பி. ஆட்சியின்போது பௌத்த குருமாருக்கு சகல வசதிகளும் அளிக்கப்பட்டன."

## ஸ்கந்தபுரம் ப. நோ. கூ. சங்கம் கிளிநொச்சி டெண்டர்

முடிவு திகதி 2-3-64

1. ஜி. பி. எஸ். ஸ்டோர் பரந்தனுக்கு நெல் ஏற்ற லொறிக்கூலி ஏற்றல் பறித்தல் உட்பட 1 புசலுக்கு 1 மைலுக்கு எவ்வெளவு என்று கோரவும். தூரம் 16 மைல்.

2. நெல் அளந்து, தைத்து அட்டி அடிக்க புசலுக்கு எவ்வளவு என்று கோரவும்.

3. 3 புசல் சாக்கு சங்கத்தில் கொண்டு வந்து தர, ஒரு சாக்கு என்ன விலை என்று கோரவும். 1000 சாக்குதேவை.

ம. மார்க்கண்டன்
1798 தலைவர்.

## வரி விளம்பரம்

**ஸ்ரீ சரவணபவான் கபே சுன்னுகம்**

சுத்தமான -சுவையான - சத்துள்ள சிற்றுண்டி - போசனம்-பானங்கள் கிடைக்கும். 19·9

## விற்பனைக்கு

பிச்ரேட், யாழ்ப்பாணத்தில் திரு. இருதயக் கன்னிமடத்திற்குப் பக்கத்தில் 6 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. E. C. மனுவேல்பிள்ளை, 49, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்குத் தொடர்புகொள்ளவும். 1986

## கண்டிப் புகையிலை விற்பனை

சொற்ப தொகை கண்டிப் புகையிலை, யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் விற்பனவுக்கு உண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் புகையிலையை மேற்படி சங்கத்தில் பார்வையிடலாம். 1989

## உள்நாட்டுத் தயாரிப்புகள்

உள்நாட்டுத் தயாரிப்புகள் என்பதற்காக வாங்குங்கள் என்று நாம் கூறவில்லை. வெளிநாட்டுத் தயாரிப்புகளிலும் பார்க்கச் சிறந்தவை, விலை குறைந்தவை என்பதற்காக வாங்குங்கள் என்றே கூறுகிறேம். விபரங்களுக்கு ஆங்காங்கே உள்ள பிரதிநிதிகளுடன் அல்லது எங்களுடன் கலந்துகொள்ளவும். அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 1947

# பெட்ரோலியம் இறக்குமதி

கொழும்பு, செவ்வாய்

ஐக்கிய அரபுக்குடியரசிலிருந்து பெட்ரோலியம் எண்ணை கொண்டு வந்த அல் சாத் அலாலி என்ற கப்பலின் கப்டனை வர்த்தகமந்திரி திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா நேற்று சந்தித்தார். இந்தக் கப்பலில் 16,000 தொன் பெட்ரோலிய எண்ணை வகைகள் வந்துள்ளன.

பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஐக்கிய அரபுக்குடியரசு ஒழுங்காக எண்ணை விநியோகம் செய்துவருகிறது.

## மண்வெட்டி எமனுனது

அளவெட்டி, செவ்வாய்

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சின்னப்பு மனைவி சின்னப்பிள்ளை (வயது 40) காலில் மண்வெட்டி வெட்டியதால், யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானுர்.

மரணவிசாரணையின் போது டாக்டர் பி. ஜே. அலக்சாந்தர், காயத்தின் காரணமாக ஏற்பு உண்டானதனுல் மரணமானுரென்று கூறினுர்.

இயற்கை மரணமென மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

# சர்வதேச அரங்கில் துரித முன்னேற்றம்

## பாகிஸ்தானுக்குசூ-என்-லாய் புகழ்மாலை

லாகூர், பெப் 25

மேற்குப் பாகிஸ்தான் சட்ட சபையில் நேற்று உரை நிகழ்த்திய சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய், சீனமீது பாகிஸ்தான் கொண்டிருக்கும் நல்லெண்ணம் குறித்து நன்றி பாராட்டிப்பேசினர்.

சீனமீது பாகிஸ்தான் காட்டும் நட்பு மனப்பான்மையை நாங்கள் மறந்துவிடமுடியாது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் சீன குறித்து பாகிஸ்தான் நிகழ்த்திய உரையையும் எம்மால் மறக்கமுடியாது. சீனவின் உண்மைநிலையையும் உள் நோக்கங்களையும் வெளியுலகுக்கு எடுத்துக்காட்டும் பாகிஸ்தான் சர்வதேச அரங்கில் வெகுவாக முன்னேறிக்கொண்டு வருகிறது என்றும் சீனப்பிரதமர் திரு. சூ. என்லாய் கூறினர்.

பாகிஸ்தான் சில நல்ல நண்பர்களைத் தேடிக்கொண்டுவிட்டது. நட்பு நாடுகளின் ஆதரவினுல் பாகிஸ்தானின் தரம் உயர்ந்துகொண்டே போகும் என்றும் திரு. சூ-என்-லாய் தெரிவித்தார்.

சீனப்பிரதமர் இன்று தமது பாகிஸ்தான் விஜயத்தை முடித்துக்கொண்டு நாளை பிற்பகல் விசேஷவிமானமார்க்கமாக கொழும்பு போலச் சேருவார். அங்கு அவர் மூன்று நாட்கள் தங்கியிருப்பார்.

### முதலாவது தலைவர்

மேற்கு பாகிஸ்தான் சட்டசபையில் உரைநிகழ்த்திய முதலாவது வெளிநாட்டுத் தலைவர் திரு. சூ-என்-லாய் என்பது குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட்

## வெற்றி தோல்வியின்றி முடிந்தது

வெலிங்டன், பெப். 25

தென்னுபிரிக்காவுக்கும் நியுஸிலாந்துக்குமிடையே இங்கு நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் இன்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

தென்னுபிரிக்கா தனது முதலாவது இன்னிங்ஸில் 302 ஓட்டங்களும் இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதிவரை 2 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 218 ஓட்டங்களும் எடுத்தது.

நியூஸிலாந்து தனது முதலாவது இன்னிங்ஸில் 253 ஓட்டங்களும் இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்ட நேர இறுதிவரை 6 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 138 ஓட்டங்கள் எடுத்தது.

---

## தாலிக்கொடி திருட்டு வழக்கு

### 16-ந் திகதி விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

கடந்த 14-ந் திகதி இரவு நல்லூரில் திருமதி சரஸ்வதி சுப்பையாவின் தாலிக்கொடியையும் தங்கச் சங்கிலியையும் திருடியதாக 19 வயது இளைஞன் கே. வரதராஜாமீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு அடுத்த மாதம் 16-ந் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.


கடைசி வாரம் !

கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (அம்பாறை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி

எம். ஆர். ராதா, மனோகர், வி. கே. ராமசாமி, புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ஜி. வரலக்ஷ்மி பி. எஸ். சரோஜா, சம்பந்தம் மற்றும் பலர் நடிக்கும்



மொடர்ன் தியேட்டர்ஸ்

காட்டு ரோஜா

இசை: கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ஜானகி — பி. எஸ். கோவிந்தன்

1000 தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி


யாழ்ப்பாணத்தில்

## சிங்கள பொலிஸிகள் இனி இல்லை

யாழ்ப்பாணம் புதன்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டு ஸ்தாபனத் தலைவர் ஜனுப் ரபீக் நேற்று யாழ்ப்பாணம் வந்து காப்புறுதிக் கூட்டு ஸ்தாபன அமைப்பாளர்களைச் சந்தித்து தமிழ்மக்கள்மீது சிங்களப் பொலிசிகள் திணிக்கப் படமாட்டாதென வாக்குறுதியளித்ததாகத் தெரியவருகிறது.

கூட்டு ஸ்தாபனத் தலைவர் ஜனுப் ரபீக்கிடம் அமைப்பாளர்கள், சிங்களப் பொலிஸிகளைத் தமிழ்மக்களுக்கு அனுப்புவதாலும் தமிழ்மக்களுக்கு சிங்களக் கடிதங்களை அனுப்புவதாலும் தங்களுக்கு ஏற்படும் சிரமங்கள்பற்றி எடுத்துக்கூறினர்.

சிங்களப்பொலிசிகளை தமிழ் மக்கள்மீது திணிப்பது சம்பந்தமாக ஏற்படும் சிரமங்களை இந்த ஸ்தாபனத்தின் யாழ்ப்பாணக் கிளை மனேஜர் மேலிடத்துக்கு எடுத்துக்காட்டியதனுலும் புதிய பொலிஸிதாரர்களைச் சேர்க்காமல் அமைப்பாளர்கள் மௌனம் சாதித்ததால் தொழில் பாதிக்கப்படுமென்ற அச்சத்திலுைம் ஸ்தாபனத் தலைவர் ஜனுப் ரபீக் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து அமைப்பாளர்களைச் சந்தித்து நிலைமையைச் சமாளித்தார் எனத் தெரியவருகிறது.

ஜனுப் ரபீக்கின் வாக்குறுதியைத் தொடர்ந்து புதிய பொலிஸிதாரர்களைச் சேர்க்க அமைப்பாளர்கள் இணங்கியதாகவும் அறியப்படுகிறது.

---

## மயிலிட்டி அந்தியகால சகாயநிதிச் சங்கம்

தெல்லிப்பழை, திங்கள்

மக்களின் அந்தியகாலக் கிரியைகளுக்கு உதவியளிககுமுகமாக அமைக்கப்பட்ட கட்டுவன் மயிலிட்டி தெற்கு வர்த்தலைவிளான் அந்தியகால சகாயநிதிச்சங்கம் சுமார் 21 ஆயிரம் ரூபாயை சகாயப் பணமாக வழங்கியுள்ளதாக சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் தலைவர் திரு: க. சின்னப்பு குறிப்பிட்டார்.

நிர்வாகிகள் தெரிவு விபரம் வருமாறு:—

தலைவர்: திரு. க. சின்னப்பு, உப தலைவர்: திரு ந. சிவகுரு, காரியதரிசி: திரு. சி. சின்னத்தம்பி, உப காரியதரிசி: திரு. க. நாகலிங்கம், தனாதிகாரி: திரு. ஆ. முத்துக்குமாரு, உப தனாதிகாரி: திரு. க. ச. கந்தவனம். நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

## சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஈச்சமோட்டையைச் சேர்ந்த 13 வயதுள்ள வேலுப்பிள்ளை விமலரத்தினம், கிரிக்கெட் மட்டையினுல் காலில் காயம் ஏற்பட்டு யாழ் பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானர்.

இயற்கை மரணமென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

---

## சமய வகுப்பு

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை மாதர் முன்னேற்றச் சங்கத்தினர் சங்கத்தின் தற்காலீக மண்டபத்தில் 'சைவ சமய வகுட்பு' ஒன்றை ஆரம்பித்து நடாத்திவருகின்றனர். சரவணை தையற்பாடசாலையில் தொழில் பயிலும் உயர்தர மாணவிகள் பலர் இந்த வகுப்பில் கலந்துகொள்ளுகின்றனர்.

---

## 22பேர் கைது

அங்காரா, பெப். 25

துருக்கி பிரதமர் திரு இஸ்மத்இனுைவைக் கொலை செய்ய முயற்சித்தது சம்பந்தமாக இதுவரை 22பேர் கைது செய்யப்ருக்கபட்டிகிருர்கள்.

## தேசீயக் கல்வித்திட்டம்

கொழும்பு, செவ்வாய்

கல்வி மந்திரி திரு. கலுகல்லை 60 பக்கங்கள் கொண்ட தேசீயக் கல்வித்திட்டம் ஒன்றை பார்லிமெண்டில் இன்று சமர்ப்பித்தார்.

சகலருக்கும் ஒரேவித அடிப்படைக் கல்வி அவசியம் என்றும், அதன்பின் பல்கலைக் கழகம், அல்லது இதர கல்வி ஸ்தாபனங்களுக்கு இஷ்டம் போல் செல்ல மாணவருக்கும், பெற்றோருக்கும் உரிமை உண்டு என்றும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சகல மாணவருக்கும் கல்வியில் சமவாய்ப்பு அளிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்றும் இதில் கூறப்பட்டுள்ளது. சட்டம் சட்டமாக இது நிறைவேற்றக்கூடும்.

---

## எதிர்வரும் கிராமசபை தேர்தல்

ஊர்காவற்றுறை, புதன்

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் வேலணை-நாரந்தனை கிராம சபைகளின் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களை அடுத்த மாத முற்பகுதியில் தாக்கல் செய்வதற்கு அபேட்சகர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

---

## வங்கி கிளை திறப்புவிழா

சுழிபுரம், செவ்.

சங்கானை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் யாழ்ப்பாண கூட்டுறவு வங்கியினர் தமது ஐந்தாவது புதிய கிளையைதிறந்துள்ளனர். வடபிரதேச ஐக்கிய இயக்க மேற்பார்வை சபைத் தலைவர் திரு. வீ. வீரசிங்கம் புதிய கிளை வங்கி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

## திடீரென இறங் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யவும் இராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டிருந்ததாம்.

### மின்சாரக் கோளாறு

இலங்கைக்குச் சமீபத்தில் கடற்படைப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள இந்திய கடற்படை விமானந்தாங்கிக் கப்பலொன்றிலிருந்து புறப்பட்ட இந்திய விமானப்படை விமானமொன்றில் மின்சாரக் கோளாறு ஏற்பட்டதுடன் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதாகவும், ஒரு டயர் வெடித்துவிட்டதாகவும் இதன் காரணமாகவே இந்த விமானம் திடீரென இரத்மலானை விமான நிலையத்தில் இறங்க நேரிட்டதாகவும் பின்னா தெரியவந்தது. முதல் வந்த விமானத்தைத் தேடியே இரண்டாவது விமானம் வந்ததாகவும் தெரிகிறது. இரு விமானங்களைச் சுற்றியும் பலத்த காவல் போடப்பட்டுள்ளது.

---

## ஆட்டுவியாபாரிகள் சங்கம் அமைத்தனர்

யாழ்ப்பாணம், புதன்

முஸ்லிம் வட்டாரத்திலுள்ள ஆட்டு வியாபாரிகள் சென்ற வெள்ளிக்கிழமை கூடி தங்களுக்கென ஒரு சங்கத்தை அமைத்துக்கொண்டனர். இவ் வியாபாரிகள் பெரும்பாலும் சைக்கிள்களில் சென்று நாட்டுப்புறங்களில் ஆடுகளை விலைக்குவாங்கி இறைச்சிக் கடைக்காரர்களுக்கு விற்பனை செய்பவர்களாவர்.

வாழ்க்கைச் செலவுகள் விஷம்போல உயர்ந்துவரும் இந் நாட்களில் ஆட்டு வியாபாரிகளாகிய தாமும் சில கோரிக்கைகளை இறைச்சிக்கடை உரிமையாளர்களிடமிருந்து பெறுவதெனவும், உரிமைகள் மறுக்கப்படும்பட்சத்தில் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதென்றும் எல்லா ஆட்டு வியாபாரிகளும் உறுதி எடுத்துக்கொண்டனர்

ப. மீரா முகிதீன் தலைவராகவும், அ. சாகுல்கமீது, அசன் குத்தூஸ் முறையே காரியதரிசி, பொருளாளராகவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். ஒரு நிர்வாகக் கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

## 'தமிழில் விஞ்ஞானம்'

உடுப்பிட்டி, செவ்வாய்

'தமிழில் விஞ்ஞானம்' என்னும் பொருள் பற்றி முன்னுள் உதவி வித்தியாதிபதி திரு. க. ச. அருள்நந்தி நாளை நெல்லியடி அரசினர் மத்திய மகா வித்தியாலய வெளியரங்கில் சொற்பொழிவாற்றுவார்.

விஞ்ஞான கழகம் ஒழுங்கு செய்துள்ள இக்கூட்டத்திற்கு உயிரியல் விரிவுரையாளர் திரு. க. சி. குகதாசன் தலைமை வகிப்பார்.

---

## பண்டத்தரிப்பு வெற்றி

சுழிபுரம், செவ்வாய்

பண்டத்தரிப்புக் கோஷ்டிக்கும் சில்லாலை விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்குமிடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்புக் கோஷ்டி முதலிரு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றது.

சித்தங்கேணி விளையாட்டுக் கழக வீரர்களுக்கும், பண்டத்தரிப்பு விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழகத்தினர் வெற்றிபெற்றனர். பண்டத்தரிப்பு வீரர்கள் முதல் இரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற்றதால் மூன்ருவது ஆட்டம் நடைபெறவில்லை.

---

## கிரேக்க ராணி சுகவீனம்

ஏதன்ஸ், பெப். 25

கிரேக்க ராணி பிரட்ரிக்கா சுகவீனமுற்றிருக்கிருரென்றும் அவர் குலைப்பன் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளாரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## சந்திப்பு

கண்டி, செவ்வாய்

சிலாபம் வணபிதா டாக்டர் எட்மண்ட் பீரிஸ் நேற்றைய தினம் மல்வத்தை பீடாதிபதியைச் சந்தித்துப் பேசினர்.

---

## பொலிஸ் கோஷ்டி வெற்றி

சுழிபுரம், செவ்வாய்

சங்கானை பொலிஸ் கோஷ்டி விளையாட்டு வீரர்களுக்கும் பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழக வீரர்களுக்குமிடையே சினேகித பூர்வமாக நேற்று முன் தினம் கரபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. பொலிஸ் கோஷ்டியினர் முதல் இரண்டு ஆட்டத்தில் வெற்றிபெற்றனர்.

---

## தனிப்பட்ட ஆஸ்பத்திரியும் அரசாங்கமும்

கொழும்பு, திங்கள்

தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளில் நோயாளரிடமிருந்து பணம் அறவிடுவதைக் கட்டுப்படுத்தும் வகையிலான சட்டம் ஒன்றை சுகாதார அமைச்சு தயாரித்து வருவதாகத் தெரியவருகிறது. வார்டுகளில் நோயாளர்களை அனுமதிக்கும்போது அவர்களிடமிருந்து எவ்வளவு அறவிடலாம், 'எக்ஸ்றே' எடுப்பது, சத்திரசிகிச்சை செய்வது போன்றவைக்கு எவ்வளவு பணம் அறவிடலாம் என்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

---

## 50,000 இந்துக்கள்

புதுடில்லி, பெப். 25

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 50,000 இந்துக்கள் குச்பிஹார் ஜில்லாவுக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.